# ஆத்ம ஜோதி




ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, இலங்கை.

# ஆத்ம ஜோதி



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 22 | சௌமிய ௵ பங்குனி ௴ 1௳ [13-3-70] | சுடர் 5

## பொருளடக்கம்


| | |
|---|---|
| திருமுறைப் பெருமை | 131 |
| ஞானப்பால் | 132 |
| பன்னிரு திருமுறை | 133 |
| ஓடி ஒளிக்கின்றான்! | 141 |
| அப்பர் அருளமுதம் - 5 | 142 |
| கச்சியப்பர் கண்ட காட்சி - 16 | 146 |
| பத்தியே முக்தியின் முதற்படி | 148 |
| சர்வமே சக்திமயம் | 150 |
| உயர்ந்த வழிபாடு எது | 154 |
| இல்லறவாசி தம் இல்லத்தைச் சுவர்க்கமாக்கும் வழி | 158 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்




ஆயுள் சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353

# திருமுறைப் பெருமை

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிக முந்நூற்
றெண்பத்து நான்கினல் இலங்குதிரு முறை மூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினல்
வண்பெற்ற முறையொன்று நூற்றினல் வன்றெண்டர்.

சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமும்
தேவர்புகழ் திருத்தோணிச் சிவனர் பங்கில்
பீடுடைய உமைமுலேப்பால் அருளாலுண்டு
பிஞ்ஞகனேச் சினவிடைமேற் பெருகக்கண்டு
தோடுடைய செவியன் முதல் கல்லூரென்னும்
தொடைமுடிவாப் பரசமயத் தொகைகள் மாளப்
பாடினர் பதிகங்கள் பாவிலொன்றும்
பதினறுயிர முளதாப் பகருமன்றே.

திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர்
தீயமணர் சிறைநீங்க அதிகைமேவுங்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலேக்
கொடுங் 'கூற்றுயின' வென்ன எடுத்துக் கோதில்
ஒருமானேத் தரிக்கும் ஒருவரையுங் காறும்
ஒருநாற்பத் தொன்பதின யிரமதாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனர் அடியிணேகள் பெற்றுளாரே.

—திருமுறை கண்ட புராணம்

சைவத்தின் மேற்சம யம்வே றிலேயதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றுளெம் உயிர்த்துணேயே.

(அருணேக்கலம்பகம்)

# ஞானப் பால்

(சுத்தானந்தர்)

மனத்தை மாசற்ற பிள்ளைபோலாக்கு; ஆர்வப் பசி கொள், 'அம்மையே அப்பா' என்று ஆருயிர்த் தந்தையைக் கூவு; அவன் தனதுஞானப்பாலை ஊட்டி உன்னை ஆட்கொண்டு ஞானசம்பந்தனுக்குவான். நீ கைத்தாளம் போட்டுத் துதி. அவன் பொற்ருளம் அளிப்பான். நீ காலால் நடந்து திருத்தலம் புகு. உனக்கு முத்துப்பல்லக்கு அனுப்புவான். ஆனுல் பல்லக்கு ஏற வேண்டும் என்ற ஆசையுடன் அவனை வேண்டாதே. இறைவனைத் தவிர வேறென்றும் விரும்பாதே. அவனை அடை' அனைத்தும் தம்மால் எய்தும். அவன் அன்பர்க்கன்பன். அடியார்க் கெளியன். உள்ளங்கவர் கள்வன். உன் உள்ளத் தொளிந்த கள்வன். அவனைக் கண்டு பிடி.

சம்பந்தர் அப்பரே என்ருர். வாகீசர் அடியேன் என்ருர். எவ்வளவு தூய பணிவு, வணக்கம்! மதுரையில் சிவமுந் தமிழும் சீரோங்கப் பணிசெய்து, வெற்றி முழக்கத்துடன் அப்பரைக் காணப் பூந்துருத்திக்கருகே வந்தார் ஞானசம்பந்தர். ''எங்குற்ருர் அப்பர்?'' என்ருர். ''இங்குற்றேன்! இதோ! உமதடிகளைத் தாங்கி வரும் பேறு பெற்றேன் என்று பல்லக்குச் சுமந்து கொண்டே சொன்ஞர் அப்பர். ஆ தாங்கள் இவ்வாறு செய்யத் தகுமோ? என்றஞ்சி வணங்கி ஆர்வமுடன் அப்பரைத் தழுவிக் கொண்டார் சம்பந்தர். தகும், தகும், ஓம்சிவம்' என்று வணங்கிஞர் அப்பர்! அன்பும் வணக்கமும் அடியார்க்கு அழகு!

★★

# பன்னிரு திருமுறை

- ஆசிரியர் -

காதல் உணர்வும் வீர உணர்வும் கொடை உணர்வும் மிகைப்படுத்தி சங்க இலக்கியங்கள் மூலம் வளர்க்கப்பட்ட காலம்ஒன் றிருந்தது. இவை தவிர மனித வாழ்வுஉயர்வதற்கு வேறு இல்லை என்ற அளவுக்கு மக்கள் அவ்விலக்கியங் களில் ஈடுபாடு கொண்டிருந்தனர். 'அரசன் எவ்வழி குடி கள் அவ்வழி' என்பது போல அரசர்களிற் பெரும்பான் மையோர் இவ்வுணர்வையே பெற்றிருந்தாராதலினால் மக்க ளிற் பெரும்பான்மையோரும் இவ்வுணர்வையே பெற்றி ருந்ததில் ஆச்சரியம் இல்லை. இதனால் பக்தி உணர்வு குறைந்துவரலாயிற்று, 'கல்வியின் பயன் கடவுளை அடை தல்' என்பதனை மக்கள் நாளடைவில் உணரத்தலைப்பட்ட னர். கடவுள் உணர்வை மக்களிடையே பரப்புவதற்காக எழுந்தவையே பன்னிரு திருமுறை இலக்கியங்களாகும்.

தமிழ்ப்புலமை மாத்திரம் வாய்ந்தவர்களால் செய்யப் பட்ட இலக்கியங்களில் காதல், வீரம், கொடை உணர்வு விஞ்சியிருக்கக்காண்கின்றோம். தமிழ்ப்புலமையோடு அருட் பெருக்கும் ஒருங்கே அமைந்த அருளாளர்களின் பாடல் களையே பன்னிரு திருமுறையில் பார்க்கின்றோம். உலக மக் களுக்கு எக்காலத்தும் திருவை வழங்கத்தக்க நூல்களே திருமுறைகள் எனப்பட்டன. திரு என்பதற்கு, கண்டா ரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்று பொருள் கூறுவர். உள்ளத்தில் ஆழ்ந்து செல்லும் அளவிற்கு ஒரு வன் பெற்ற திருவை முகத்தில் உருவாகப் பார்க்கின்றோம். ஆழ்ந்த இறைவுணர்வுடைய ஒருவனின் முகத்தில் ஒளி ஒன்று வீசுவதைப்பார்க்கின்றோம். உள்ளத்தில் உண்டான ஒளி முகத்தில் மாத்திரமல்ல; வாக்கினிலும் வீசுவதை உணரலாம். அருள் ஒளி பெற்றவர்கள் அருளாளர்கள் ஆகின்றனர். இத்தகைய அருளாளர்களே பன்னிரு திரு முறைகளை எமக்குத் தந்த ஆசிரியர்கள் ஆவர்.

இவர்கள் ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்குவர்; நாவுக்கரசுப் பெருமான் திருவதிகையில் உழவாரத்திருப் பணி செய்தபோது கற்கள் எல்லாம் செம்பொன்னுகமாறிய காலத்தும் அவற்றையும் கற்களாகவே மதித்தார். ராம கிருஷ்ணபரமகம்சதேவர் ஒரு கையில் மண்ணையும் மறு கை யில் பொன்னையும் வைத்திருந்து இரண்டையும் பேதமற நோக்கி, இரண்டையும் ஒருசேர ஆற்றில் இடுவாராம்.

காமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற்பற்ருர்
தாமரையிலைத் தண்ணீர் போல் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார்
ஊமருமாவார் உள்ளத்துவகையாம் சீவன்முத்தர்.

இந்த லட்சணமே அருட்கவிஞருடைய இலட்சணமாகும். அவர்கள் தமக்கென்று எதுவும் வைத்துக்கொள்வதில்லை; தமதென்று எதனையும் உரிமைபாராட்டுவதும் இல்லை. இன் பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் இரண்டையும் ஒப்பக் கருதும் மனச்செம்மை பொருந்தியவர்கள்.

'நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானேஇதற்குநாயகமே'

என்று இறைவனிடமே முறையிடும் தகுதிபெற்றவர் கள். உலக வாழ்க்கையில் உண்டாகும் ஆக்கங்களை எண்ணி உள்ளக்களிப்படைதலும் கேடுகளை நினைத்து அவலமுறுத லும் உலகோரிடம் நாம் காணும் ஒன்ருகும். இவ்வாறு செல்வக்களிப்பால் மையலுருமலும் அல்லல் மிகுதியால் சோர்வடையாமலும் இன்ப துன்பம் இரண்டினையும் ஒப்பக் கருதும் நல்லறிவுடையவர்களே திரு நிறைந்த உள்ள முடையவர்கள். இவர்களைச் சேக்கிழார்பெருமான்,

'கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினர்' என்று போற்றுகின்ருர்

இத்தகைய அருளாளர்கள் இறைவனைத் தவிர வேறு எண்ணமே இல்லாதவர்கள். உள்ளம் முழுவதும் செம் பொருளாம் சிவம் நிறைந்திருக்கப்பெற்றவர்கள். திரு

வாளாகிய அப்பெருமான் தோன்றாத்துணையாய் நின்று அடியார்களைக்காப்பவன். இறைவனே சென்றடையாத திருவுடையவன். அத்திருவுடையானைத் தமக்கு ஆக்கிக் கொண்டவர்களும் திருவுடையவர்கள் ஆகின்றார்கள். இறைவன் திருவருள் வழிநின்று ஒழுகும் மெய்யடியார்கள் தாம் பெற்ற இன்பம் உலகம்பெற வேண்டுமென்ற நோக்கம்கருதி அருளிச் செய்த நூல்கள் திருமுறைகள் ஆயின.

முறை என்ற சொல் நூல், பழமை, ஊழ், கூட்டு, கட்டு, முறைமை எனப்பல பொருள்களில் வழங்கிவருகின்றது. தடவை, உறவு, நூற்பகுப்பு, நியமம், என்ற பொருள்களிலும் வழங்குகின்றது. கந்தபுராண அவையடக்கச் செய்யுளில் வரும்.

இறைநிலம் எழுதுமுன் இளையபாலகன்
முறைவரை வேனென முயல்வதொக்குமால்

என்ற பகுதியில் முறை என்பது நூல் என்பதையே குறிக்கின்றது. 'முக்காற் கேட்பின் முறையறிந்துரைக்கும்' என்ற பழஞ் சூத்திரத்திலும் முறை என்பது நூல் என்பதையே குறிக்கிறது. பேராசிரியர், நூல்களை உலகநூல் அறிவனூல் என இருவகையாகப்பிரிப்பார். பிறவியின் பயனை அடையச் செய்பவை அறிவன் நூல்களாகிய திருமுறைகளே.

கற்றவை கற்று நிற்பதற்குரிய நூல்வகைகளை வாழ்க்கை, வழிபாடு, வணக்கம், மந்திரம் என நான்காகப் பகுக்கலாம். வாழ்க்கை நூல் திருக்குறளாகும். வழிபாட்டு, நூல் திருமந்திரமாகும். வணக்க நூல் திருவருளால் நன்னெறி முதல்வர் நால்வர்வாயிலாக வையகத்துக்கு அளித்துள்ள தேவாரம், திருவாசகம் என்னும் சிறப்புத் திருமுறைகளும் ஏனைய திருமுறைகளுமாகும். மந்திர நூல் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தாகிய சிறப்புத் திருமாமறையினை விதந்தெடுத்துக் கூறும்பகுதிகளாகும்.

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரைப்பெறும். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் பாடியவற்றைத் தேவாரம் என்று வழங்குவர். முதல் மூன்று திருமுறைகளும் திருஞானசம்பந்தர் பாடியவையாகும். 4ம், 5ம், 6ம், திருமுறைகள் நாவுக்கரசர் பாடியவை. 7ம் திருமுறை சுந்தரர் பாடியவை. எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் மணிவாசகர் பாடியவை. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந்திருமுறை. திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந்திருமுறை. ஆலவாய் இறைவன் திருமுகப்பாசுரம்முதல் காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனர் முதலிய பலர்பாடிய நூல்களின் தொகுதி பதினோராந்திருமுறை. பெரியபுராணமே பன்னிரண்டாந்திருமுறையாகும்.

கோயில்களில் நான்மறையோடு தமிழ்மறையும் ஓதப்படுகின்றது. தமிழ்மறை ஓதும்போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற நியதிபற்றி ஓதுவார்கள். இவை பன்னிருதிருமுறைகளின் ஒழுங்குபற்றி அமைந்தவை என்பதை யாவரும் உணரலாம். இவற்றோடு திருப்புகழையும் தற்காலத்தில் சேர்த்து ஓதுவர். முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்றும் அடங்கன் முறை என்றும் வழங்கப்பெறும். தேவாரம் என்பதற்குப் பலவிதமாகப்பொருள் கூறுவர். தே+ஆரம் எனப்பிரித்து இறைவனுக்குரிய பாமாலை எனவும், தே+வாரம் எனப்பிரித்து இறைவனுக்கு அன்பினல் பாடப்பெற்ற பாடல் எனவும் கூறுவர். வாரம் என்ற சொல்லுக்கு அன்பு என்பதுபொருள். 'தே' என்பது தெய்வத்தைக் குறிப்பது. வாரம் என்பது இசைப்பாட்டு வகையில் ஒன்று. அது சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடையதென்றும், இசைக்குரிய உருப்படிகளில் ஒன்றென்றும், தெய்வத்தைப்பாடும் பாடலென்றும், தாள அமைப்போடுகூடிய தென்றும் சிலப்பதிகார உரையி

லிருந்து அறியக்கிடக்கின்றது. கடவுளை வாழ்த்தும் பாட லுக்குத் தேவபாணி என்ற பெயர் இருந்தது போல கடவு ளைத் துதிக்கும் இசைப்பாடலுக்குத் தேவாரம் என்ற பெயர்வந்தது. தேவாரம் என்பது பழங்காலத்தில் திருப் பதியம், திருப்பாட்டு என்ற சொற்களாலும் அழைக்கப் பட்டு வந்தது. இக்காலத்தில் திருநெறித்தமிழ் எனக்குறிப் பிடுவர்.

திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் இளமையிலேயே தமது வழிபடு தெய்வ மாகிய பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெற்றவர். அப்பொழுது சோழநாட்டை ஆண்டவன் இராசராச சோ ழன். தேவார திருமுறைகளில் அங்கொன்றும் இங்கொன்று மாகச் சிலர் பாடக்கேட்டு மனமுருகினுன் சோழன். முழுப் பாடல்களையும் பாடக் கேட்க வேண்டுமென விரும்பினுன் அரசன். அவ்விருப்பினை நம்பியாண்டார் நம்பியிடம் தெரி வித்தான். நம்பியும் பிள்ளையாரின் திருவருளால் திரு முறைகள் சிதம்பரம் திருக்கோயிலில் இருப்பதை அறிந் தார்.

கோயிலில் திருமுறை ஏடுகள் யாவும் கறையான் மண் ணுல் மூடுண்டு கிடப்பதைக்கண்டு அரசன் கவலைகொண் டான். இக்காலத்திற்கேற்றவற்றை வைத்து மற்றவற்றை மண்மூடச் செய்தோம் என்ற அசரீரிகேட்டு அரசன் ஆறு தல் அடைந்தான். நம்பிகள் அவற்றைத் திருமுறைகளாக வகுத்தார். சோழனைத் திருமுறைகண்ட சோழன் எனவும் அபயகுல சேகரன் எனவும் அழைப்பர்.

இறைவனே இந்த அருளாளர்கள் மூலம் இத்திருமுறைப் பாடல்களை வெளிப்படுத்தினுன் என்பது பண்டுதொட்டு வந்த மரபாகும். இச்செய்தியை ‘எனதுரை தனதுரை யாக’ எனத் திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்தென், சிந்தைமயக்கறுத்த திரு வருளினனை’ எனத் திருநாவுக்கரசரும் கூறுகின்றனர். சுந் தரருக்கு ‘பித்தா’ எனவும் ‘தில்லைவாழ் அந்தணர்தம் அடி

யார்க்கும் அடியேன்' எனவும் சிவபெருமானே அடியெடுத்துக் கொடுத்தார். சேக்கிழார் பெருமானுக்கு எம்பெருமானே 'உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்த செய்தி யாவரும் அறிந்ததே. பதினொராந் திருமுறையிலுள்ள திருமுகப்பாசுரம், மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானடிகளாகிய சிவபெருமானலேயே திருவாய் மலர்ந்தருளப்பெற்ற சிறப்புடையது.

தெய்வத் தமிழ் நூல்களாகிய இத்திருமுறைகளை இறைவனல் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்களைப் போன்று இறைவனருளிய மறைகளாகவே கொண்டு போற்றிப் பயிலுதல் வேண்டும் என்பது முன்னோர் துணிபு. இறைவன் அருளிச் செய்தனவாகப் பாராட்டப்படும் வேதங்களை எழுதாக்கிளவி எனவும், இறைவனது திருவருள்பெற்ற திருஞான சம்பந்தப் பிள்ளையார் முதலிய பெருமக்கள் இனிய தமிழாற் பாடியருளிய இத்திருமுறைகளை 'எழுதுமறை' எனவும் வழங்குதல் மரபு. 'வண்டமிழால் எழுதுமறை மொழிந்தபிரான்' எனப்பெரியபுராணமும், 'எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்' எனத் தில்லைக்கலம்பகமும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் போற்றுமுகமாக அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை 'எழுதுமறை, எனச் சிறப்பித்தல் காண்க.

தமிழிலே சைவசமய பக்தி நூல்கள்தாம் ஏராளமாக இருக்கின்றன. சைவத்தின் பன்னிரு திருமுறைகளே இவ்வுண்மையை விளக்கும். வைணவ சமய பக்தி நூல்கள் நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் என்று ஒரு தொகுப்பில் அடங்கிவிட்டன. திருமுறைகள் காலத்திற்குப் பின்னும் திவ்யபிரபந்த காலத்திற்குப்பின்னும் பக்தியைப் போதிக்கும் சைவ வைணவப்பாடல்கள் எவ்வளவோ பிறந்திருக்கின்றன. ஆயினும் கணக்குப்பார்த்தால் சிவபக்தியை ஊட்டும் பாடல்களே எண்ணிக்கையில் அதிகம்.

இவ்வாறு சைவசமய சம்பந்தமான நூல்களே தமிழில் மிகுந்திருப்பதனல், சைவசமயப் பற்றுள்ள புலவர்களிலே

பலர் சைவத்தையும் தமிழையும் இணைத்தே பேசுகின்றனர். சைவம் இன்றேல் தமிழ் இல்லை. சைவமும் தமிழும் ஒன்றே என்று கூறுகின்றனர். திருமுறைகள், புராணங்கள் சிற்றிலக்கியங்கள் எல்லாவற்றிலும் சிவபெருமானைப் போற்றும் நூல்களே ஏராளம். இவைகளிலே பல நூல்கள் சிறந்த இலக்கியச்சுவையுடன் விளங்குகின்றன என்பதையும் எவரும் மறுக்கமுடியாது. ஆதலால் சைவந்தான் தமிழை வளர்த்தது; சைவம் இன்றேல் தமிழ் வளர்ச்சி இல்லை; தமிழ் இல்லை; என்று சைவப்புலவர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்வதற்கு உரிமையுண்டு. அவ்வுரிமையைத் தமிழ் அன்பர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வதில் தவறில்லை.

திருமுறைகளிற் கயிறுசார்த்திப் பார்த்து திருவருள் காட்டும்வழி என நம்பி வாழ்ந்த வாழ்க்கை நம்முன்னோருடையதாகும், ஒவ்வொருவர் இல்லத்திலும் பன்னிரு திருமுறைகள் இருந்தன என்பதற்கு இச்செய்தி ஆதாரமாகும். மரணத்தறுவாயிலிருக்கும் போது ஆத்ம சாந்திக்காகவும் நல்ல நினைவோடு ஆத்மா உடலைவிட்டுப் பிரியவேண்டும் என்பதற்காகவும் திருமுறைகளை ஓதிவந்த வழக்கம் நீண்டகாலமாகவே இருந்துவந்தது. கிராமங்களில் அதனை திருப்புப் படித்தல் என வழங்குவர். மரண வீடுகளிலும் திருமுறைகள் ஓதப்பட்டுவருகின்றன.

திருமுறைகளைப் பண்ணோடு பக்தியாக ஓதுவதற்குக் கோயில்தோறும் ஓதுவார்களை நியமித்திருந்தார்கள். அவர்களுக்குக் கோயில் மரியாதைகள் வழங்கப்பட்டன. பூஜகருக்கு அடுத்தபடியாக ஓதுவாருக்கே இன்றும் மரியாதை செய்யப்பட்டு வருகின்றது.

திருமுறைகளைக் கோயில்களில் வைத்து இறைவனுகப் பாவித்துப் பூஜைகள் நடைபெற்றுவருகின்றன. திருக்கோயில்களில் திருமுறையேடுகளைச் சேமமாகவைத்துப் பூசித்தற்கு இடமாக விளங்கிய மண்டபம், திருக்கைக்கோட்டியெனவழங்கப்பட்டுவந்தது.

திருமுறைப்பாடல்கள் தமிழர் பெற்ற அரும்பெருஞ் செல்வம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு திருமுறைப்பாடலும் சிவபெருமானது திரு உருவத்தைக் காட்டும் கண்ணுடியாகும். ஆகவே திருமுறைப் பாடல்களைத் திருமுறைக் கண்ணுடி என அழைத்தல் சாலப் பொருத்தமானதாகும். வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாக விளங்கும் நாதன் நாமம் நமச்சிவாயத்தின் விரிவுரையாக அமைந்தவையே பன்னிரு திருமுறைகளாகும். சந்தனுச்சாரியருள் ஒருவரும் மூள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தருளிய வருமாகிய உமாபதிச் சிவாச்சாரியார் பன்னிரு திருமுறைகளைப் போற்று முகமாகப் பின்வருமாறு கூறுகின்ருர்.

மூவரோது திருமுறைகளேழு, திருவாதவூரர் முறையொன்று, இசைப்
பாவரைந்த முறையொன்று, மூவர் முறையொன்று பாசுரமதாதியாக்
கோவை செய்த முறையொன்று, சேவையர் குலாதி நீதிமுறை
யொன்றுடன்
பாவைபாகர் திருவருள் சிறந்த முறை பன்னிரண்டென வைத்தபின்.

திருமுறை பாராயணம் செய்து வந்தால் முகத்தில் திருவிளங்கும்; உள்ளத்தில் திருப்பொலியும்; வீட்டில் திரு விளங்கும்; நாடு திருநாடாகும். உலகமே திருமுறை ஒலியினுல் திருநிறைந்ததாகும்.

திருமுறைகளைச் சாதனமாகக் கொண்டு எல்லாம்வல்ல இறைவனை வழிபட்டுப் போற்றும் முறை ஞான பூசை யென நூல்களாற் பாராட்டப் பெறுகின்றது.

ஞானநூல்தனை யோதல், ஓதுவித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்ரு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை

என்பது அருணந்தி சிவாச்சாரியசுவாமிகள் வாக்காகும்.

★★

# ஓடி ஒளிக்கின்றான்!

- நோ. இராசம்மா -

ஓடி ஒளிக்கின்றான்; முருகன்
ஓடி ஒளிக்கின்றான்; இறைவன்
உள்ளத்தில் உறைந்து
உணர்விற் கலந்து

ஓடி ஒளிக்கின்றான்; என் இறைவன்
ஓடி ஒளிக்கின்றான்!

உற்று நோக்கிடும்
ஒவ்வொரு பொருளிலும்
அருள் வடிவைக் காட்டி நின்று
கருணை பொழிகின்றான்; ஞானக்
கருணை பொழிகின்றான்!

தேடியலைந்தேனே; திருவைத்
தேடியலைந்தேனே!
ஓடியும் நாடியும்
கூர்வடி வேலனைப்
பாடி மகிழ்ந்தேனே; முருகனைப்
பாடி மகிழ்ந்தேனே!

தப்பிதம் செய்யவில்லை; யானும்
தன்னிலை மாறவில்லை
ஒப்பிலா முதலை
ஓராறு முகனை

தஞ்சமாய்க் கொண்டேனே! என்இறைவனைத்
தஞ்சமாய்க் கொண்டேனே!
முன்னர் தவப்பயனாய்; என்றன்
அன்னை தவப்பயனால்
முக்கண்ணன் மகனை
முதுதமிழ்க் குமரனை

கருத்தினிற் கொண்டேனே; கந்தன்
கழலிணைப் பணிந்தேனே!

# அப்பர் அருளமுதம் - 5

## உன்தாள் என்தன் நெஞ்சத்து எழுதி வை.

-( முத்து )-

தஞ்சை மாவட்டத்தில் திருச்சத்தி முற்றம் என்ருெரு திருத்தலம் உண்டு. சுவாமியின் பெயர் சிவக்கொழுந்து என்பதாகும். இவ்வூரின் பெயரால் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரைச் சத்திமுற்றப் புலவர் என அழைப்பர். நாரையின் சொண்டுக்குப் பனங்கிழங்கை உவமை கூறி இலக்கிய உலகில் அழியாத ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டவர்.

இத்தகைய சத்திமுற்றத்திற்கு நாவுக்கரசுப் பெருமான் சென்ருர். சிவக்கொழுந்தைத் தரிசித்தார். எம்பெருமானது திருவுருவக்காட்சி அவரை அடைய வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது. மரண பயம் இன்னெரு பக்கத்திலே எழுந்தது. நமனுடைய தூதுவர் சிலவேளை தம்மிடத்தில் வந்துவிட்டால் அவர்களுக்குத் தான் சிவபக்தன் என்பதை எந்த அத்தாட்சி கொண்டு நிரூபிக்க முடியும் என்று சிந்தித்தார். நமனை நினைக்கும் போதே உள்ளத்தில் ஒரு நடுக்கம். நமனிலும் பார்க்கக் கொடியவர்கள் அவனுடைய தூதுவர். இவர்கள் திடீரென வருவார்கள். யாருக்கும் அறிவித்துவிட்டு வருவதில்லை. அவர்களைப் பார்த்தாலே பயமாக இருக்கும். பொன்னைப் பொருளைக் கொடுத்தும் போகச்செய்ய முடியாது- ஒரு நிமிஷம் தாமதித்து வருகிறேன் என்ருலும் கேட்கமாட்டார்கள். இத்தகையவர்கள் என்னிடத்திலே வரமாட்டார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி உண்டு. ஆகவே எம்பெருமானே எனது உள்ளத்தில் உமது பாதத்தைப் பதித்து வைப்பீராக.

உமது பாதத்தைப் பார்த்தாலே யமனுக்குப் பயம் ஏற்படும். மார்க்கண்டேயரிடம் யமன் சென்றபோது இறைவனுரின் திருப்பாதத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. யமனுடைய தூதுவருக்கும் யமன் பட்டபாடு தெரிந்திருக்கும். யமன் இறைவனுரின் திருப்பாதத்தைப் பற்றித் தனது தூதுவரிடம் கூறியிருப்பான். அதனுல் உமது பாதத்தை எனது இதயத்திலே பதித்து வைத்தால் யமன் வந்தாலும் சரி அவனுடைய தூதுவர் வந்தாலும் சரி திருப்பாத அடையாளத்தைப் பார்த்த உடனேயே சிவபக்தன் என்று கண்டுகொள்வார்கள். பழைய ஞாபகம் வரும். என்னைக் கொடுமைப் படுத்தவந்தவர்கள் பழைய ஞாபகத்தினுல் எனக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டுச்சென்று விடுவார்கள். உமது திருப்பாதத்தை எனது நெஞ்சத்திலே எழுதி வைத்தால், உமது திருப்பாதம் எனக்குத் துணையாக இருக்கிறது என்ற துணிவில் நான் கவலையற்று வாழ்வேன். இல்லையேல் அக்கவலையிலேயே இறந்துவிடுவேன், நான் கவலைப்படுவதை அறிந்தால் யமன் தூதுவருக்கே அது கொண்டாட்டமாகிவிடும்.

எம்பெருமானே! இறக்கும் போது அதைப் பார்த்துக் கொள்ளலாம். அல்லது யமன் தூதுவர் வந்தபின் நான் ஆவன செய்வேன் என்று நீர் சொன்னுல் அந்த நேரத்தில் உமது உதவி எனக்குக் கிடைக்கும் என்பதற்கு என்ன உறுதி உண்டு. யமன் தூதுவர் வந்துவிட்டால் புலனைந்தும் பொறிகலங்கிவிடும். போகும் வழிதெரியாது. எங்கே செல்லப் போகின்றேன் என்பதும் தெரியாது. அறிவு அழிந்துவிடும். இந்த நிலையில் நான் உம்மை எவ்வாறு அழைப்பேன். வாழ்நாள் முழுவதும் நமசிவாயத்தை நாவுக்குப் பழக்கிவைத்திருந்தாலும் உணர்வு அழிந்தபின் நாவினுல் உச்சரிப்பதுதான் எப்படி? இப்பொழுதே நல்ல உணவு உண்டால் உம்மை மறந்துவிடுகின்றேன். பட்டினியாக இருக்கும்போதும் மறந்துவிடுகின்றேன். கொடிய நோய் வந்துவிட்டால் நோயைப்பற்றி நினைப்பதே தவிர உம்மை மறந்துவிடுகின்றேன். உறக்கத்தில் ஒருநாளாவது உம்மை

நினைத்ததே இல்லை. எத்தனையோ கனவு கண்டேன். ஆசை அருமைக்காவது ஒரு நாளாயினும் கனவில் காணும் வாய்ப் புக் கூட இல்லையே. இங்ஙனமானால் கடைசி நேரத்தில் உமது நினைவு எனக்கு எப்படி உண்டாகும்? யமதூதுவ ரைக் கண்டு எனது அறிவு அழிந்துவிடாமல் இருப்பதற்கு உமது திருப்பாதத்தை எனது உள்ளத்தில் எழுதி வைப் பீராக.

உடல் விழுந்தபின் எனக்கு என்ன நடந்தது என்ப தை யார் அறிவார்? இவ்வுடல் இருக்கும்போதே உமது திருவருள் பதியுமானால் அதனைப் பார்த்துப் பலர் உமக்கு அடியவர்களாவார்கள். உமது திருவருள் கிடைக்கப்பெற்ற அடியவர்களை இந்த ஊனக்கண்ணால் கண்டால் தானே உமக்கும் அடியவர்கள் பலர் சேருவார்கள். இல்லையேல் அடுத்த பிறப்பு எப்படி என்பதை யார்தான் சிந்திக்கப் போகின்றார்கள்? எனக்காகச் செய்யாவிடினும் உமக்காகவே னும் எனது உள்ளத்தில் உமது திருவடிகளை எழுதிவைப்பீ ராக. உமது திருவடிகளை எனது உள்ளத்தில் எழுதிவைப் பதால் எனக்கும் நன்மையுண்டு! உமக்கும் பலனுண்டு; மற்றவர்களுக்கும் சுகமுண்டு. ஆதலால் எம்பெருமானே எனது வேண்டுதல் சுயநலம் மாத்திரம் கலந்ததல்ல; பர நலம் பெரும்பான்மையும் கலந்ததாகும்.

கலியுகத்தில் உள்ள மக்கள் கருமம் ஆற்று முன்பே கூலியை எதிர்பார்ப்பவர்கள். ஆதலால் முத்தி கொடுத்த பின் உம்மை வணங்குவோம்; அன்பு செலுத்துவோம்; பக்தி பண்ணுவோம் என்று பேரம் பேசக் கூடியவர்கள்; ஆனபடியினால் என்னைப்போன்ற ஒருவனுக்கு நீர் அருள் செய்தால் தான் அவர்களுக்கு உம்மிடத்திலே நம்பிக்கை உண்டாகும். உமது அருளைப் பெறுவதற்கு நான் தகுதி யற்றவனாயிருக்கலாம். மற்றவர்களைக் கடைத்தேற்றும் நோக்கத்திற்காகவாவது எனது உள்ளத்தில் உமது திருப் பாதத்தைப் பதியச் செய்வீராக.

சத்திமுற்றத்துறையும் சிவக்கொழுந்தே உமது திருச்ச முகத்தில் எனக்கு இந்த எண்ணம் உதித்ததால் நீர் செம்மை தரு சத்திமுற்றத் துறைபவராவீர். செம்பொருள் என்பது இறைவர் ஒருவரையே குறிக்கும். 'செம்பொருள் காண்ப தரிது' என வள்ளுவருங் கூறுவார். செம்மையுள் நிற்ப வருக்குச் சிவகதிவிளையும் என்பது அப்பருடைய நம்பிக்கை.

'கூற்றங் குமைப்பதன்முன் பூவாரடிச் சுவடென்மேற் பொறித்துவை'

என்று வேண்டுதல் செய்த அப்பரடிகளின் வேண்டுதலை நாமும் படித்து அவர்வழி நிற்போமாக.

'வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் றுளென்றன் னெஞ்சத் தெழுதிவை யீங்கிகழில்
அம்மை யடியேற் கருளுதி யென்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே'

கொடிய யமதூதுவர்கள் மிகவும் நெருங்கி என்னை இறக்கச் செய்தற்கு முன்னம், இவ்வுலகத்துவாழும் போதே உன்திருவடிகளை என்மனதிலே பதியவைத்து அருள் வாயாக. அவ்வாறன்றி இம்மையிலே அருளாதுபோயின் மறுமையில் நீ எனக்கு அருள் செய்வாய் என்பதை யார் அறிவார்கள்? தன்னிடத்தே வாழ்வோர்க்கு சிறப்பைத்தரு கின்ற திருச்சத்திமுற்றம் என்னும் தலத்தில் எழுந்தருளிய சிவக்கொழுந்தீசனே!

★★
★★

அழிக்கும் முறைகளைக் காணும் சாமர்த்தியம் மனித ஜாதியைத் தாழ்த்தும். ஆக்கும் முறைகளைக் காணும் சாமர்த்தியமே மனித ஜாதியை உயர்த்தும்.

பிழைகளை ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்வதே உய்யும் வழி என்பதில் நான் பரிபூரணமான நம்பிக்கையுடையேன்.

—காந்தி.

# கச்சியப்பர் கண்ட காட்சி 16

## (ஏழாலை சிற்றம்பலம் முருகவேள்)

சிங்கமுகாசுரன் முன்னே செல்ல, தாரகன் பின்னே, கடையிலே செல்ல, நடுவிலே, கோடிக்கணக்கான வீரர்களுக்கு நடுவிலே சூரபன்மா வடக்குநோக்கி ஆலந்தீவுக்குச் சென்றான்.

எத்தனையோ ஆயிரம் சதுரமைல்கள் விஸ்தீரணமுள்ள அவ்விடத்தினைச்சுற்றி நான்கு வாயில்களுடன் கூடிய மலைகளினாலாய ஒரு சுற்று மதில் அமைத்தான். மதிலினைச் சுற்றித் தன் எண்ணற்ற வீரர்களைக் காவல் புரியுமாறு விடுத்தான். காளிகளையும் பூதங்களையும், பைரவர்களையும், மந்திரங்களினால் அழைத்து, நான்கு வாயில்களிலும் காவலுக்கமர்த்தினர்.

உள்ளே வட்டவடிவமாக முதலில் ஆயிரத்தெட்டு குண்டங்களைச் சமைத்தான். சமைத்து, தாரகனை அழைத்து 'இக்குண்டங்களைக் கவனித்து ஆகுதி பெய்து யாகம் இயற்றுதல் உனது பொறுப்பு' என்று பணித்தான். இவ்வட்டத்திற்குள் இன்னொரு வட்டமாக நூற்றெட்டுக் குண்டங்களைச் சமைத்தான். சிங்கமுகாசுரனை நோக்கி 'இந்நூற்றெட்டுக் குண்டங்களிலும் ஆகுதி செய்தல் உனது பொறுப்பு' என்றான்.

உள்வட்டத்தின் நடுமையான இடத்தில் தனக்கென ஒரு குண்டம் அமைத்தான். வேதியின் மத்தியில் ஒரு வச்சிர கம்பத்தினையும் நிறுவிக்கொண்டான், மாயையினை நினைக்க, அவளும் யாகத்துக்கென மாமிசமென்றும், இரத்தம் என்றும், நெய்யென்றும், பால் என்றும் தயிர் என்றும் அனந்தம் பொருள்களை நிறையக்கொடுத்தாள்.

மூவரும் யாகம் செய்யலுற்றார்கள். யாகத்தில் விளைந்த அக்கினி சுடர்விட்டுக்கிளைத்தது. வியாபித்து எரிந்தது. அவ்வக்கினி, வானத்தைச் சுட்டது, மண்ணைச் சுட்டது, கடலைச் சுட்டது, திக்குகளைச் சுட்டது, அண்டங்கள் யாவற்றையும் சுட்டது. சிவபெருமானோ வந்திலன். கீழே நின்று யாகம் செய்கின்ற தொழிலைத் தம்பியாரிடத்தே ஒப்புவித்து, சூரபன்மா வானிற் சென்றான். சென்று அந்தரத்தில் நின்றுகொண்டு தன் உடம்பின் தசைகளை ஒவ்வொன்றாக அரிந்து கீழே குண்டத்தில் இட்டான். தசைகளைஅவன் அரியஅரிய அவைகளும்

வளர்ந்துகொண்டே வந்தன. அப்பொழுதும் கூட சிவபெருமான் வந்திலர்.

பொருளை இட்டவன், உடம்பினை விட்டவன், இப்பொழுது எல்லாப் பாசங்களுக்கும் நிலைக்களனாகி இருக்கும் தன் உயிரையே விடத்துணிந்தான். அந்தரத்தில் நின்றும் கீழே, வச்சிரகம்பத்தின் மேலே விழுந்து உயிரையே விட்டுவிட்டான். உயிரையே அர்ப்பணித்த உயிருக்குத்தான் சிவமாய பேறு என்பதனை அறியாது மயங்கிய இந்திரனும் நண்பர்களும் ஒரு சிறிது மகிழ்ந்து நின்றார்கள்.

சிங்கமுகனும் தாராகனும் அண்ணன் சென்ற வழியே தாமும் செல்ல ஆயத்தமானார்கள். அப்பொழுது, அங்கு பரமேஸ்வரன் வழமை போல ஒரு மறையவனாகி வந்தார். வந்து, சூரபன்மாவின் தம்பியாரிருவரையும் நோக்கி அறியாதவர்போன்று என்ன நடந்தது என்றார். அவர்களும் நடந்ததைச் சொல்லி நின்றார்கள்.

பெருமானார், 'நும் தமையனாரை இப்பொழுதே மீண்டும் உயிர்த்து வரச் செய்கின்றோம்; வருந்தற்க' என்று, தேவகங்கையினை வருவித்து குண்டத்தில் புகுவித்தார். அப்பொழுது சூரபன்மா, முன்னர் இருந்ததனை விட ஆயிரம் மடங்கு தேஜசுடன் ஆர்த்தெழுந்தான். ஆர்த்தெழுந்து, 'அண்டங்கள் அனைத்துக்கும் நான் அரசனாகவேண்டும்; ஓரண்டத்தில் இருந்து இன்னொரு ,அண்டத்திற்குச் செல்ல வாகனமும் அழியாத உடம்பும் வேண்டும்; படைக்கலங்களும் வேண்டும்' என்று 'வேண்டாத' வரங்களை எல்லாம் வேண்டி நின்றான். அதற்குச் சிவபெருமான் 'உள்ள ஆயிரகோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளுக' என்று அருள்செய்து, மற்றும் வரங்களையும் நல்கி, சிங்கமுகனையும் தாரகனையும் சேரவிளித்து, உங்கள் மூவரையும் நமது சக்தி அன்றி வேறு யாரே வெல்லுவர் என்று கூறி மறைந்தருளினார்.

தொடரும்

---

அன்போடு உறுதியையச் சேர்த்துவிட்டால் முடிவில் எதிர்ப்பவர் ஒருவர்கூட இல்லாமல் செய்துவிடலாம். சீர்திருத்த விரும்புபவர் இரக்கவும் கூடாது கோபிக்கவும் கூடாது.

எவ்வளவு மன்னித்தாலும் நன்மையே உண்டாகும். பலவீனர்கள் மன்னிக்க முடியாது. பலவான்களால்தான் முடியும்.

—காந்தி

# பக்தியே முக்தியின் முதற்படி.

( க. இன்பநாதன் )

சென்ற இதழ் தொடர்ச்சி.

பக்தியின் சக்தியை அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உலக ஜீவராசிகள் அனைத்தின் மேலும் நான் அன்புடையவன் என எவனொருவன் எண்ணுகின்றானோ, அவனுடைய உள்ளத்தில் இலகுவிற் பக்தியெழுந்து அவனால் அமைதியடைய முடியும் என்றும் பகவத் கீதையிற் கண்ணனாற் கூறப்பட்டுள்ளது.

வேள்வியுந் தவமுமிசைவோன் யானே
உலகுக் கெல்லாமொரு பேரரசன்
எல்லா உயிர்கட்கு நண்பன் யான்
என்றறிவான் அமைதியுறுவான் என்பதே

பகவான் கண்ணபிரான் கூறுவது எனவே அன்பர்மேல் அன்புடைய இறைவன் மேல் உள்ளத் தூய்மையுடன் அன்பு செலுத்து பவர்களின் இன்னல்களைப் போக்கி அருள் புரிந்து அபயமளிப்பதில் இறைவன் முன்னிற்பார். தனது பக்தராகிய நாவுக்கரசருக்கு இறைவன் அபயமளித்த சந்தர்ப்பமொன்றை இவ்விடத்தில் நினைவு கூற முடியும். அது பின் வருமாறு:—

ஒரு சமயம் நாவுக்கரசர் சமணத்தை நீங்கிச் சைவம் சேர்ந்த போது வஞ்சகச் சமணர்கள் அவரைக் கற்றூணுடன் கட்டிக் கடலிலே அமிழ்த்தினார்கள். அப்போது நாவுக்கரசர் தூய அன்புடன் இறைவனைத் துதி செய்து,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே

என்று பாடினார்

உடனே கல்லானது தோணியாக மிதந்து அவரைச் சுமந்து சென்று கரையேற்றியது. என்னே! இறைவனின் கருணை, தம்முடைய அன்பர் மேல் அன்பு செலுத்தும் ஆண்டவனின் அடியிணையை அன்புடன் போற்றுதல் எம் கடனன்றோ? அங்ஙனமின்றி உண்மையான பக்தி செலுத்தாது உடலை வருத்தி வணங்கினாலும் அவருடைய அருளைப் பெற முடியாது என்பது திருமந்திரத்திற்கூட கூறப்பட்டுள்ளது.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டு
பொன் போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகம் குழைவார்க் கன்றி
என் போல் மணியினை எய்த வொண்ணாதே

எமது என்புகளை விறகாக உபயோகித்து நெருப்பை உண்டாக்கி, நமது தசைகளை அறுத்து அத்தீயிலிட்டுப் பொசுக்கி யெடுத்தாலும் மனத்தின் கண் மாசற்ற பாசமில்லாவிட்டால் இறைவனின் கருணையைப் பெற முடியாது என்பதே இதன் கருத்து.

'' குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு ''

என்பது முப்பா நூலின் முடிபு எனவே பெறற்கரிய இம் மானிடவுடலை விட்டு எமது ஆன்மா அழிவதற்குள் தூய பக்தியை இறைமேற் செலுத்தி அவருடைய கருணையைப் பெற்று முக்தி யடைய முயல்வோமாக.

இரவும் பகலும் வெயிலும் குளிரும்
மாறி மாறியே வரும் போகும்மே
மறலியின் வலியால் ஆயுளும் இழியும்
அந்தோ! அன்றும் ஆசைக்கழிவிலை!
—பஜகோவிந்தம்.

**

# சர்வமே சக்தி மயம்

(தொகுப்பு - அக்கரைலிங்கம்)

'கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவன்
நற்று டொழா அரெனின்' (குறள்)

தூய மெய்யறிவுடைய இறைவனது நல்ல திருவடிகளை துதித்து வணங்காராயின் அவர்களெல்லாம் கற்றதினுல் ஒரு பயனும் இல்லை.

சைவ சமயத்தவர் தலையில் குட்டுவதற்கான காரணம் இந்திரன் பத்மசூரனுக்குப் பயந்து சீர்காழியில் நந்தவனம் அமைத்து சிவனை வழிபட்டுவரும் வேளையில், நீரில்லாமல் நந்தவனம் வாடியதைக்கண்ட இந்திரன் தனக்கு சிவனை வழிபடும் வாய்ப்பு போய்விடுமென்று கவலைப்பட்டு பெரும் சிந்தனையில் இருக்கும்போது அதேவேளையில் அவ்வழியாகவந்த நாரதர் இந்திரனைக் கண்டு, இந்திரா! நீ கவலைப் படக் காரணம் என்ன? என்று வினவ இந்திரன் நாரதரை வணங்கி தன் குறைபாடுகளை கூற அதற்கு நாரதர் நீ விநாயகரை உள்ளன்புடன் வழிபடுவாயானுல் வினையை தீர்க்கவல்லவனுகிய விக்னேஸ்வரன் உனது குறைகளை இனிது நிறைவேற்றுவார். அத்துடன் நீயிழந்த பொன்னுலகத்தையும்மீண்டும்பெறுவாய்எனக்கூறிநாரதர்சென்ருர்

நாரதர் கூறிய வார்த்தைகளை கேட்ட இந்திரன் வினையைத் தீர்க்கவல்ல விநாயகனை மனதிலெண்ணி அருச்சினை செய்து கடும் தவம் புரிந்தான். சிறிது நாட்களுக்குப் பிறகு ஐந்து கரத்தன், ஆனை முகத்தான், கந்தருக்கு முன்பிறந்த கணபதி அற்புதம் நின்ற கற்பகக் களிருக பலகோடி கணங்கள் சூழ கணபதி இந்திரனுக்குக் காட்சியளித்தார். அவ

ரை இந்திரன் பன்முறை விழுந்து வணங்கினுன். அவனது அருளை மெச்சிய விநயகர் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று வினவ இந்திரன் சுவாமி! ஈசனை திரு முழுக்காட்ட தீர்த்தம் இல்லாத குறையை இந்திரன் தெரிவித்தான். இதனை அறிந்த பிள்ளையார் இந்திரனுக்கு வரம் அளிப்பதுடன், தான் தந்தைக்குச் செய்யும் உதவியுங்கூட என மகிழ்ந்து, உனக்கு வேண்டியது தீர்த்தம் தானே கங்கையைக் கொண்டுவரட்டுமா? அல்லது சமுத்திரத்தைக் கொண்டுவரட்டுமா? எனக் கேட்க இந்திரன் விநயகரை வணங்கி சுவாமி! கொங்கு நாட்டில் அகத்திய முனிவர் சிவ பூசை செய்து கொண்டிருக்கிருர். அவருடைய கமண்டலத்துக் குள்ளிருக்கும் காவேரியை தேவரீர் இங்குகொண்டு வருமாறு செய்தால் நந்தவனம் செழிப்படையும். என தேவராஜன் வேண்டிக் கொண்டான். அவ்வண்ணமே செய்வோம் கவலை வேண்டாம் என்று அருள்புரிந்து விநயகர் விரைவாக கொங்கு நாடு சென்ருர்.

கொங்கு நாடு சென்று துங்கக் கரிமுகத்து தூமணியாகிய கணபதி காகவடிவங் கொண்டு அகத்தியரின் கமண்டலத்தில் அமர்ந்தார். முனி காக்கையை விரட்டியோட்ட தன் கையை உயர்த்திஞர். கமண்டலத்தை கவிழ்த்து விட்டு காகவடிவாக வந்த கங்காதரனின் மகன் கணபதி பறந்தார். கமண்ட லத்தில் இருந்து பெருகிய காவேரியை நீ பூமியில் செல்லக் கடவாய் எனப்பணித்தார். காவேரித் தாய் தன்யாத்திரையைத் தொடங்க ஆரம்பித்தாள். நதி விரைந்து பூமியில் பாய்ந்தது. அதனைக் கண்ட அகத்தியர் எரிமலைபோல் பொங்கிய கோபத்தோடு காக்கையைப் பார்த்தார் கணபதி காகவடிவம் நீங்கி அந்தண பிரமசாரி வடிவம் கொண்டு நின்ருர். இப்பவேனும் முனிவர் தம்மைப் புரிந்துகொள்வாரா என்று பரிசோதிப்பவர் போல அகத்திய முனிவரின் முன் சென்ருர் விக்கினேஸ்வரர்.

அகத்திய முனிவர் சினமாயிருக்கும் போது விக்கினேஸ்வரராகிய பாலகனின் மேல் தன் மனம் லயிக்கவில்லை.

பொங்கும் கடல், கொந்தளிக்கும் எரிமலை போல அகத்தியரின் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. அவ்விடத்தை விட்டு சிறுவன் ஓட ஆரம்பித்தான். முனிக்கும் கோபம் அதிகரித்தது; தொடர்ந்து முனிவர் துரத்தினார். சிறுவனை நெருங்கியபின் தன் இரு கைகளையும் பொத்தி பலமாக சென்னியில் குட்டுவதற்கு ஆயத்தத்தோடு நெருங்க பாலகனாகிய பிராமண வடிவத்திலிருந்து பிள்ளையார் அகத்தியரின்மேல் மனமிரங்கி வேதியருக்கு ஞானஸ்வரூபமாக விளங்கும் தன் அழகிய திருமேனியைக் காண்பித்து தரிசனமும் அளித்தார்.

முக்காலமும் உணர்ந்த அகத்தியர் அடுத்த கணம் புல்லரிப்புடன் தான் செய்த தவறை உணர்ந்தார். என்னிடம் எழுந்தருளியுள்ள எம்பெருமானை அடியேனாகிய நான் அடித்துத் துரத்திவிட முனைந்தேனே என்று சொல்லி கண் கலங்கி ஏங்கி நின்றார். சித்திவிநாயகருக்குக் குட்ட ஓங்கிய தனது இரு கைகளாலும் இடி விழுவதுபோல் தமது தலையில் குட்டினார். மெய்ஞ்ஞான கருணையே உருவான கணபதி அவரது கரங்களைப்பற்றி நிறுத்தி அஞ்சாதே! என்று அபயம் அளித்தார். அகத்தியரே! நிலவுலகில் தெய்வேந்திரன் சிவபூசைக்கென்று வைத்த நந்தவனம் நீரின்றி கருகிப் போனதால் என்னைவேண்டி தவம் செய்தான். அவனது வேண்டுகோளுக்கிணங்கி உமது கமண்டலத்தை காகவடிவம் கொண்டு கவிழ்த்தினேன்.

தவத்தில் சிறந்த நீ எனக்கு அன்பன். ஆதலால் உனக்கு வேண்டிய வரத்தை எம்மிடம் கேள் என்றார். அகத்தியர் விநாயகரை வணங்கி சுவாமி! ஞானமே உருவான யானைமுகத் தெய்வமே அடியேனுங்களிடத்திலும் சிவனிடத்திலும் குறையாத அன்புள்ளவராக இருக்க வரம் தரவேண்டும். இப்பொழுது அடியேன் செய்ததுபோல தங்களது தேவரது சந்நிதியில் சிரசில் குட்டிக் கொண்டு வழிபடுவோருக்கு அறிவுபெருகவேண்டும். அவர்களது குறையை நீக்கி நல்லருள் கொடுக்கவேண்டும். என முக்கால

மும் உணர்ந்த அகத்தியமுனி வேண்ட அவ்வண்ணமே செய்வோ மென்று, எம்பெருமாளுகிய பிள்ளையார் அருள் புரிந்து வரம் கொடுத்தார். இவ்வழக்கத்தை இப்போதும் செய்பவருக்கும் விக்கினேஸ்வரன் கருணை புரிவார். பழைய முறையாகிய இப்பழக்கத்தை இப்போதும் செய்து விநாய கனின் அருளைப்பெறுவோமாக.

'அல்லவை தேயஅறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்' (குறள்

**

# மோட்சம்

நான் மோட்சம் அடையவே முயன்று வருகின்றேன். அதற்காக நான் குகைகளை நாடிச் செல்லவேண்டியதில்லை. நானே ஒரு குகையைச் சுமந்து கொண்டிருக்கிறேனே. குகையிலிருந்துகொண்டு ஆகாயக் கோட்டை கட்டுபவர்க்கு மனச்சாந்தி உண்டாகாது. வீட்டிலிருந்தாலும் ஆகாயக் கோட்டை கட்டாதவர்க்கே மனச்சாந்தி உண்டாகும். ஆதலால் இடைவிடாது சேவை செய்வதே விமோசன மார்க்கமாகும்.

மோட்சம் அடைவதே மனித வாழ்வின் லட்சியம், கடவுளுடன் ஐக்கியமாவதே மோட்சம். கடவுள் சிருஸ்டியில் கடவுளைக் காண்பதே அவரைக் காண்பதற்கான மார்க்கம். தேசத்துக்குச் சேவை செய்வது மூலமாகவே இது சித்திக்கும்.

—காந்தி

# உயர்ந்த வழிபாடு எது?

(அருள்சத்தியநாதன்)

இந்து சமயத்திலும், இஸ்லாம், சமயத்திலும், கிறிஸ்தவ சமயத்திலும், பௌத்த சமயத்திலும், அந்தந்த சமயங்கள் தோன்றிய நாடுகளின் கலாச்சார பண்பாடுகளுக்கேற்ப வழிபாட்டு முறைகளும், சமய விதிகளும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த விதி முறைகள், சமயத் தலைவர்களாலும், ஏனைய பாரம் பரிய வழக்கங்களாலும், சமயத்தில் புகுத்தப்பட்டனவேயன்றி, அந்தந்த சமயங்களுக்குரிய கடவுள்களோ சமயங்களைப் புவிக்குக் கொணர்ந்த மகான்களாலோ ஏற்படுத்தி விடப்பட்டனவல்ல.

இதற்கு உதாரணமாக, கிறிஸ்தவ சமயத்தை எடுத்துக் கொண்டாலும், அதன் ஸ்தாபகரான புனித கிறிஸ்து பெருமான் தமது சுவிசேஷ போதனையில் எங்காவது, இப்படித்தான் கோவிலுக்குச் செல்லவேண்டும், இப்படித்தான்மந்திரங்களைச் சொல்ல வேண்டும், இந்த சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும், இப்படி நடக்க வேண்டும், என்றெல்லாம் விதிகளைச் சமைத்தார் என்ற செய்தி புனித விவிலிய நூலில் எங்குமே கூறப்பட வில்லை. ஏனெனில், அவர் அப்படிப் போதிக்கவில்லை. ஞானப் பழமாக, உயர்ந்த ஒரு நற்செய்தியைப் பூமிக்கு எடுத்து வந்த சமாதானத் தூதுவர். தன் மூன்று வருட கால நற்செய்தி பிரசங்கத்தின் பொழுது, ஒரே ஒரு சமயமே தன் சீஷர்களுக்கு, 'பரமண்டல மந்திரம்' என்ற அனைத்தும் சமயத்தினரும் சொல்லக் கூடிய செபத்தை உபதேசித்தருளினார். அதுவும் சீஷர்களினதும், பக்தர்களினதும், வேண்டுதலின் பேரிலேயே, அறிவிலும், பணத்திலும், வறுமை யுற்றிருந்த தன் மக்களுக்கு அதனை உபதேசித்தார். அவர்கள் சமயக் குருக்களின் கோரப்பிடியிலகப்பட்டு வீண் ஆடம்பரங்களுக்கும் ஆசாரங்களுக்கும். அடிமைப் பட்டு இறைவனிடம் எவ்வாறு மன்றாட வேண்டும் என்பதையே அறியாதிருந்தார் பரமண்டல மந்திரம் ஓர் உயர்ந்த செபம். இந்து தர்மத்தி

லுள்ள கருத்துக்களுக்குவிளக்கம்கொடுப்பதுபோன்ற செபம் இதனை இங்கு விளக்கப்புகின்,கட்டுரை அனுவசியமாக நீண்டு விடுவது மட்டுமல்ல, கட்டுரையின் திசையே திரும்பி விடுவதாக இருக்கும்.

இந்து சமயத்திலும்,கண்ண பரமாத்மா தன்கீதையிலோ தன் சொந்த வாழ்விலோ அன்றி சிவபிரானோ, இராமனோ அன்றி இன்று எம் முன்நடமாடும் தெய்வமாகக் கருதப்படும் ஸ்ரீ சத்திய சாய் பாபா அவர்களோ, என்னை இப்படித்தான் வணங்க வேண்டும் எனக் கூறியதில்லை. ஏனெனில், அது அவசியமற்றது. இந்துசமய நூல்கள்,இரத்தமோ, இறைச்சியோ அன்றி தேன் மலர்களோ எதுவாயினும் சரி, முழுமனதோடு கடவுளுக்கு அர்ப்பணிக்கப் படுகின்றது எதுவோ, அது கடவுளுக்கு உகந்ததாயிருக்கிறது என்றே பேசுகின்றன. உயிர் வதை வெறுக்கத் தக்கது; புலால் தள்ளத் தக்கது எனக்கண்டிப்புடன் உபதேசித்து வந்த புத்தரே பிச்சையாகத் தமக்களிக்கப்பட்ட பன்றிக் கறியை ஏற்றுக் கொண்டு, பிச்சையாக அளிக்கப்படும் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என தன் சிஷர்களுக்கும் உபதேசித்திருக்கிறார். ஆகவே இந்த மேற் கோள்களிலிருந்து என்ன உண்மைபுலப்படுகின்றதென்றால், ஆண்டவன் சமய விதி முறைகளைப் பொருட்படுத்துவதில்லை. அவன் கேட்பது தூய்மையான உள்ளத்தையே, என்ற தத்துவமே.

ஆண்டவன் விரும்புவது, மலரையும், மஞ்சளையும், சாம்பிராணி ஊதுவத்திகளையல்ல, மலரைப் போன்ற மென்மையும், மஞ்சலைப்போன்ற புனிதமும், ஊதுவத்தியைப் போல் தெய்வீக மணமும் கமழும் பக்தனின் மனத்தையே, ஆண்டவன் கேட்கிறான். பக்தர்களிடம் மனத்தைக் கல்லாக வைத்துக் கொண்டு, ஆயிரம் மலர் பூஜை செய்து தான் என்ன பயன்? மகான்கள் வேண்டியது, மலர்களையும், மாலைகளையுமல்ல, மனத்தையே அவர்கள் வேண்டினார்கள் என்பது அவர்களது வாழ்க்கை ஏடுகளைப் புரட்டும் பொழுது எமக்கு தெரிய வருகிறது.

இப்படி நான் இங்கு சொல்லி வருகையில், எதனையுமே ஆராயும் உங்கள் உள்ளம் 'மலரும் மங்களப் பொருட்களும் மாதவன் மனத்துக்குகந்ததல்ல, என பேசிடும் பொழுது, அவை இன்னும் மங்களப் பொருட்களாகப் பாவிக்கப்பட்டு வருவதன் நோக்கமென்ன? என்று ஒரு வினவை எழுப்பத் தவருது. ஒவ்வொரு சிறந்த உள்ளமும் எழுப்ப வேண்டிய வினவே.

ஆதி நாட்களில், எம்மைக் காத்தருளும் பெருமானுக்கு நன்றி செலுத்தும் வழக்கம் மக்களிடையே உண்டாகி, பின் அதற்கு உறுதுணையாகக்கோவில்களும் பூசாரிகளும்எழுந்திட வழக்கமாயிருந்து வந்தது. ஆசாரமாக மாறியது பெரியவர்கள், இது பற்றி விரிவான இலக்கணம் வகுத்தார்கள். வழக்கம் ஆசாரமாக மாறியதும் காணிக்கை செலுத்துவது பற்றி வரையறைகள் வகுக்கப் பட்டன. சில பொருட்கள், பார்ப்பதற்கு மங்களகரமாகவும், கடவுள் தன்மையை விளக்கிடுவனவாகவும், இருந்ததினுல், அவற்றைப் பெரியோர்கள் மங்கள பொருட்களாகவும், ஆண்டவனுக்குசமர்ப்பிக்கஉகந்தது எனவும் பிரகடனப் படுத்தினுர்கள். உதாரணமாக, மலர்களையே எடுத்துக் கொண்டாலும், மலர் ஒரு தூய்மையான ஒரு பொருள். மாசற்றது, தேன் வண்டுகள் மலர்களில் மாசை ஏற்படுத்தலாம் என்பதற்காகவே, விடியற் காலையிலேயே மலர்கள் பறிக்கப்படுகின்றன. மலர்களைப்பார்க்கும் பொழுது மனத்தில் மலர்ச்சி, இயல்பான சந்தோஷம் -- புனிதம் ஏற்படுகிறது. அத்தோடு, மலர், மனிதனின் பரிசுத்தத் தன்மையை, வெள்ளை மனத்தை குறிப்பதாக இருக்கிறது பூஜைக்கு, தேனுடன் கூடிய வெண் மலர்களை அதிக மாகப் பாவிப்பதற்கு முக்கிய காரணம் இதுவே.இதிலிருந்து என்ன தெரிகிறதென்ருல், சம்பிரதாயங்களை மீறுவதுகுற்றம் அல்ல கட்டாயமுமல்ல என்பதே. மலரின்றியும், மஞ்சளின்றியும், மலர் முகத்தோனை வணங்கலாம். இந்து சமயம் மாத்திரமல்ல, எல்லா சமயங்களும் மக்களிடம் வேண்டுவது, மலர்ந்த மலரைப் போன்ற உள்ளங்களையன்றி வேறில்லை என்பதை

நீங்கள் இச் சமயம் தெளிவுடன் உணர்ந்து கொண்டால் இப்பந்தியை நான் சிறப்பாகக் கையாண்டவனுவேன்.

'தூய்மையான உள்ளம்' என்ற பதத்தை, நான் இங்கு பல முறை உபயோகித்திருக்கிறேன். இதனுல் தூய்மையான உள்ளம் என்ருல் என்ன என்பதை இங்கு நான் விளக்க வே-ண்டும். தூய்மையான உள்ளம் என்ருல் என்ன? அது ஏன் வேண்டப்படுகிறது?

எமது உள்ளமாகப் பட்டது, இச்சைகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. மாயையால் மறைக்கப் பட்டிருக்கிறது. உணர்ச்சிகளால் வேலியிடப்பட்டிருக்கிறது. ஆகவே தான் நான் என்ற மனப்பான்மை ஒவ்வொரு ஜீவனிடமும் மிகுந்திருக்கிறது. இந்த உணர்ச்சியுடன் நாம் பொருட்களேப் பார்க்கும் பொழுது பிரம்மமான பொருட்கள் ஒவ்வொன்றும், உலகப் பொருட்களாகத் தெரிகின்றன. எம் சிந்தை எந்நேரமும் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த மனத்தையே, நம்மில் அனேகர் பெற்றிருக்கிருர்கள். இத் தன்மை அதாவது மாயைத் திரை கிழிக்கப் பட்டவுடன், எமக்கு அனைத்தும் பிரம்மமாகவே தெரியும். இந் நிலையை யடைபவனே ஜீவன் முக்தன், மகான், பெருமான், சுவாமி என்று அழைக்கப்படுகிருன். இதுவே பரிணும வளர்ச்சியின் உச்ச கட்டம். அவன், அவனுக மாறும் நிலை ஆனுல் இந் நிலையை மிகக் குறைந்த எண்ணிக்கையினரே அடைகின்றனர். இந் நிலைக்குக் கீழ்ப்பட்டவர்கள், உலகப் பற்றுடன் ஆனுல் விசுவாசத்துடன்-கடவுள்பேரில்-இருப்பவர்கள்ஓரளவு புலன் இந்திரிய கட்டுப்பாட்டுடன் இருப்பவர்கள், தூய்மையான உள்ளத்தைப் பெற்றிருப்பார்கள். பொருமை, காமம், பொருளாசை ஆகிய எண்ணங்கட்குப்பதிலாக, அன்பு, சாத்விகம் அகிம்சை, கருணை, ஆகியன பெற்றிருப்பவர்கள், கடவுளினுல் ஆட்கொள்ளப்படுகிருர்கள். அவர்கள் உள்ளத்தால், கடவுள் தம்மை வெளிப்படுத்த இயலும்.

தொடரும்

# இல்லறவாசி தம் இல்லத்தைச் சுவர்க்கமாக்கும் வழி

(சுவாமி இராமதீர்த்தர்)

ஒவ்வொரு குடும்பத்திலும் கணவன் மனைவியின் மகிழ்ச்சியை முற்படுத்த விரும்புகிறான். மனைவியும் கணவனின் மகிழ்ச்சியை முற்படுத்த விரும்புகிறாள். ஆனால் அவர்களின் மிகச் சிறந்த எண்ணங்களுடன் கூட விளைவு யாது? அவர்கள் இருவரும் மற்றவரின் வீழ்ச்சியை உண்டாக்கச் செய்கிறார்கள். யார் குற்றங் கூறப்படவேண்டும்? அவர்களின் மிகச்சிறந்த அக்கறையா? இல்லை. அவர்களின் அறியாமையே குற்றங் கூறப்பட வேண்டும். அவர்கள் மற்றவரின் நன்மை எதில் தங்கியிருக்கிறதென்று அறியார்கள். இதுவே தொல்லைகளுக்கும் துயர்களுக்கும் காரணம்.

ஒருவர் மற்றவரின் இழிவான இந்திரிய நாட்டங்களை உபசரிப்பதனால் அல்லது அவற்றிற்கு இடங்கொடுப்பதனால் ஒருவர்க்கொருவர் இன்பத்தை முற்படுத்துவதாய் மக்கள் கருதுகின்றனர். ஒருவர் மற்றவரின் துராசைக்கு இடங்கொடுக்கும்போது அது நன்மைக்கென்று அவர்கள் கருதுகின்றனர். இந்நன்மைக் கருத்தெல்லாம் அறியாமையில் அடிப்படை கொண்டுள்ளது. அப்படியான அறியாமை அகற்றப்படவேண்டும். அப்போது ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியானதாயிருக்கும்.

யாம் கடவுளை மாற்ற முடியாது, யாம் இயற்கையை மாற்ற முடியாது, என்பதை நினைவு கூர்க. யாம். ஆன்மவுணர்வுக்கு எழவேண்டுமென்பதே இயற்கை விதி, தெய்வ விதி. உலக மடமைகள் அனைத்தும், இவ்வுலகில் மனிதரின் உலகியல் அறிவனைத்தும் ஒவ்வொருவரையும் இத்தெய்வத் தன்மைக்குச் செல்லும் செம்மைப் பாதையிற் தள்ளுவ

தற்கு நாடி நிற்கின்றன. வலிமைகொண்டு வற்புறுத்துதலில் ஒவ்வொருவரும் வேதாந்தியாக இருப்பதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும்.

உன்னை நம்பவைப்பதற்கு வேதாந்தம் வாளும் துப்பாக்கியும் கொண்டுவரத் தேவையில்லை. இயற்கையின் விதிகள் அனைத்தும் கடவுளின் போர் வீரர்களும் பெரும் படையும் போன்றவை. அவை உன்னை ஆத்மானுபூதிக்கு முன்னேக்கி நடத்துவதில் விடாது முயல்கின்றன. ஆகையால் நீ விருத்தியடையவேண்டும். நீ வேறு வகையாக நடக்கமுடியாது.

உன் அயலாரின் நன்மை எதனில் அமைந்திருக்கிறதென்று நீ அறிந்தால் நீ இயற்கை விதிகளிற் கிணங்க பணிபுரிவாய். ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வோர் அழுக்கடைந்த இருட்டறையும் கடவுளுக்கு (அல்லது சுவர்கமாக) மாற்றப்படும்.

இயற்கை விதிகளின் பிரகாரம் உண்மையான நன்மை கடவுளுடன் உள் ஒருமையை அனுபவபூர்வமாக உணர்வதில் அமைந்திருக்கிறது. உன் ஒரே நன்மை நீ தன் வயனுதலிற் தங்கியிருக்கிறது. நீ உன்னையே எல்லாம் வல்ல, நிறை ஆற்றலுடைய, அகண்ட கடவுள் மாத்திரமாய் அனுபவபூர்வமாக உணரும்போதே நீ தன் வயன். 'நான் இன்னாரின் மகன்' என்று நீ உணர்வது போன்று நீ கடவுளுடன் உன் ஒருமையை உணரும்போது, அக்கடவுள் தன்மையை உணரும்போது, அக்கடவுட்டன்மை உனக்கு உண்மையானதாகும் போது, 'நான் இன்னாரின் மகன்' என்பது உனக்கு ஒரு கனு, கடந்த காலத்தின் ஒரு விஷயமாகும் போது, அதுவே அனுபூதியின் அடைவு.

எங்ஙனம் உன் துயர்கள், கவலைகள் அதே திசையிற் சார்ந்து இயங்குகின்றன என்பதைப்பற்றி, நீ உன்னையே கடவுள் உணர்வு நிலைக்கு உயர்த்த வேண்டு மென்பதே

இயற்கைத் திட்டம் என்பதைக் கணித உறுதியுடன் உன் காட்சிக்குக் கொண்டுவர முடியும் என்று சொல்வது போது மானதாயிருக்கிறது. நீ இவ் இலட்சியத்தை அடையாததில் துன்பம் அமைந்திருக்கிறது. அவ் இலட்சியத்தை நோக்கி நகர்க, எழுக. அப்போது உனக்கு பாவம் இல்லை. நீ அனைத்துக்கும் அப்பாற்பட்டிருக்கிறாய். நீயே பூரணன், பரமோத்தமன்.

அனுபூதி ஒரு துள்ளுதலிற் பெறமுடியாது. காலம் தேவையானது இவ்வுடம்பை அது உள்ள விருத்தி நிலைக்கு உருவாக்கப் பத்து இலட்சக்கணக்கான வருஷங்கள் எடுத்தன.

முற்பிறப்புகளில் நீ ஒரு காலம் ஒரு செடியாய் இருந்தாய். இன்னொருகாலம் நீ ஆபிரிக்காவில் ஓர் அடிமையாய் இருந்தாய். இன்னொருகாலம் நீ வேறேதோ ஒரு நாட்டில் இன்னொரு மக்கள் இனத்தில் தோன்றினாய். இன்னும் இவ் வாறே இக்காலம் வரைக்கும்.

ஒரு வீட்டை அழிப்பதற்குக் காலம் எடுக்கிறது. ஆனால் ஒரு வீட்டை அமைப்பது போன்று அதை அழிப் பதற்கு அவ்வளவு காலம் எடுப்பதில்லை. நீ போதுமான வெடிமருந்து வைத்திருந்தால் அல்லது நீ போதுமான சக்தி பெற்றிருந்தால் நீ அதை நாசமாக்கலாம். ஆனால் அவ்வாறு பேசுகையில் அதை வெடித்துச் சிதறப் பண்ணு வதற்குப் பலர் போதுமான வெடிமருந்து வைத்திருக்க வில்லை.

உன் மனைவி மக்களுடன் வாழ்ந்து கொண்டு நீ இத் தத்துவ ஞானத்தைச் சம்பூரணமாக ஆட்சி கொண்டால், நீ அதை மனித நுண்ணறிவு மூலம்கூட ஆட்சி கொண் டால், நீ மாற்றிப் பிறந்துள்ளாய், நீ பந்த மற்றிருக்கின் றாய், நீ மேலும் மறுபிறப்பு அனுபவிக்கமாட்டாய் என்று வேதாந்தம் பகர்கிறது. இவ்வாழ்வில் கடவுட்டன்மையை அனுபவபூர்வமாக உணர்வதற்கு நீ முப்பாதைகளாற்

செல்லவேண்டியிராது. அம்மக்களுக்கு மரணத்திற்குப் பின் வாக்குறுதி யளிக்கப்பட்ட இன்பங்கள் அனைத்தையும் பெறுவதற்கு வேதாந்தத்தில் நுண்ணறிவுத் திடநம்பிக்கை பெற்றிருப்போர் அதைச் சிந்தனையும் செயலுமாகிய சாதனத்திற் சாதிக்க வேண்டும். அவர்கள் அதை அனுபவிக்க வேண்டும். மேலும் அதை உணரவேண்டும்.

பழைய ஏற்பாட்டில் கர்மங்களால் ஈடேற்றம் விதிக்கப் பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் விசுவாசத்தால் ஈடேற்றம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மைப் பேரின்ப நிலையாகிய சுவர்க்கம் ஞானத்தில் அடையப்படுகிறது.

கர்மங்கள் மாத்திரம் ஈடேற்றம் கொணர மாட்டா. இயேசுகிறிஸ்துவின் விசுவாசம் ஈடேற்றத்தை வருவிக்க மாட்டாது. உன் சொந்த ஆன்மா மூலமாகவே ஈடேற்றம். நீ உன் சொந்த ஆன்மாவை அறியவேண்டும். அக் கணநேரம் நீ பந்தமற்றவனுயிருக்கிருய்.

**அறிதல் நுண்ணறிவு மூலம் என்றும் உணர்வுமூலம் என்றும் இருவிதம்.**

உண்மை ஆன்மாவை உணர்வு மூலம் அறிதலே ஞானம். ஈடேற்றம் குன்ரு விசுவாசம் அல்லது மாருத அறிவு மூலமே, இதை நீ பெறவேண்டும். அதிலிருந்து தப்பியோடு. நீ சஞ்சலம் நிரம்பியவனுவாய் நீ அதைப் பெறவேண்டும்.

எம்பொதுக் குடும்பங்களில் யாது நிகழ்கிறது? கணவனும் மனைவியும் அவளது அல்லது அவனது ஈடேற்றத்தை அனுகூலமாக்குவதில், நிறை உண்மை ஆன்ம அறிவு சம்பாதிப்பதில் ஒருவர்க்கொருவர் உதவி புரிய வேண்டும். அதை அவர்கள் செய்துகொண்டிருந்தால், குன்ருவிசுவாசம், மாருத ஆன்ம அறிவு ஈட்டுவதற்கு மனைவி கணவனுக்கு உதவி புரிந்தால் அவளே கணவனின் கிறிஸ்து அல்

லது இரட்சிப்பவள். மேலும் எதிர்மாறுகவுமே. உள்ளபடி மனைவி கணவனின் யூதாஸ் இஸ்கரியத்து (துரோகி) ஆகிருள் மேலும் எதிர்மாறுகவுமே.

உன் சொந்த அறியாமையே உன்னைக் கீழ்நிலைக்கிழுப்பது. குடும்ப முறையில் யாதும் உன்னைக் கீழ்நிலைக்கிழுப்பதில்லை. அத்தொடர்புகளின் செப்பமின்றிய உபயோகமே உன்னைக் கலக்குகிறது. வீட்டில் மனைவி யூதாஸ் இஸ்கரியத்தின் பகுதியை நடிக்கிருள். அவள் தன் கணவன் அவளது உண்மை ஆன்மாவை முப்பது வெள்ளிக் காசுகளுக்கு விற்கச் செய்ய விரும்புகிருள். அவள் தன் கோட்டியறையை அல்லது தன்னை அலங்கரிப்பதற்காக தன் உண்மை ஆன்மாவை சில சிறு திற அணிமணிகளுக்கு அல்லது சில பகட்டுப் பொருட்களுக்கு விற்கிருள். அது போலவே கணவனும் நடக்கிருன். மனைவி கணவனை அவனிலேயே சார்ந்திருக்கச் செய்யவேண்டும். ஆனுல் மனைவி தனக்குரியவன் என்று அவள் எண்ணும்படி கணவன் விரும்புகிருன். கணவன் தனக்குரியவள் என்று அவன் எண்ணும்படி மனைவி விரும்புகிருள். அதனுல் தொல்லை ஏற்படுகிறது. அவள் அவனை அடிமைப்படுத்த விரும்புகிருள். அவனும் அவளை அடிமைபடுத்த விரும்புகிருன்.

நீர் ஓர் எருதை ஒரு கயிற்றுற் கட்டி அதைக் கயிற்றுற் பிடித்துக் கொள்ள முயன்ருல் நீ எருதைப் பிடிப்பது மட்டுமன்று ஆனுல் எருதும் உன்னைப் பிடிக்கிறது. எல்லாச் சொத்தும் எல்லா உடமைகளும் அடிமைத்தனமே.

வேதாந்தத்தின்படி இச் சொத்துக் கணக்கிடும் நோக்கத்திற்குப் பதிலாக வாங்கும் நோக்கமின்றிக் கொடுக்கும் நோக்கம் இருந்தால் ஒவ்வொரு வீடும் விண்ணுலகமாக் கப்படமுடியும்.

தொடரும்

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | :50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவுதனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 5-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினுலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 13–3–70